திருச்சி தெற்கு மாவட்டம் திருவெறும்பூர் தொகுதியில் காட்டூர் பெரியார் சிலை அருகில் "ஓரணியில்_தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை"யின் பயிற்சி முகாமினை மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்து. BLA2 மற்றும் BDA உறுப்பினர்கள் கழகத் தலைவர் அவர்களின் ஆணையை நிறைவேற்ற அயராது உழைக்குமாறு கேட்டுக்கொண்டார். இந்நிகழ்வில் மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன், தொகுதி பொறுப்பாளர் மணிராஜீ, சேகரன், செந்தில், பகுதி கழகச் செயலாளர்கள் நீலமேகம், தர்மராஜ், சிவக்குமார், ஒன்றிய செயலாளர்கள் கருணாநிதி, கங்காதரன் , நகர செயலாளர் காயம்பு, பேரூர் கழகச் செயலாளர் தங்கவேலு மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர் .

மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ தலைமையில்

திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக சார்பில் 'ஓரணியில் தமிழ்நாடு' ஒற்றுமைப் பேரணி - பொதுக்கூட்டம்!

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர், எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., சூர்யா வெற்றிகொண்டான் சிறப்புரை! வி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ முன்னிலை!

திருவள்ளூர் ஜூலை 01;-

திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ் சந்திரன் எம்.எல்.ஏ விடுத்துள்ள அறிக்கை வருமாறு

திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக சார்பில் ஓர் அணியில் தமிழ்நாடு பரப்புரை ஒற்றுமை பேரணி மற்றும் பொதுக்கூட்டம் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ எனது தலைமையில் நாளை 02-07-2025 புதன் கிழமை மாலை 5 மணியளவில் திருவள்ளூர் பெரியகுப்பம் ரயில் நிலைய அருகில் நடைபெறுகிறது

இதில் திருவள்ளூர் சட்ட மன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் முன்னிலை வகிக்கிறார் நகரக் கழகச் செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன், திருவள்ளூர் நகர் மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகிறார்கள் இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு தமிழர் வாழ் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர், கழக கொள்கை பரப்புச் செயலாளர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி, கழக சட்டத்துறை இணைச் செயலாளர் சூர்யா வெற்றி கொண்டான் ஆகியோர் கலந்து கொண்டு பேரணியை தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றுகிறார்கள்

இந்நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிட பக்தன், கழக விவசாய அணி துணைச் செயலாளர் ஆர்.டி.இ.ஆதிசேசன், கழக நெசவாளர் அணி துணைத் தலைவர் ஒ.ஏ.நாகலிங்கம், திருத்தணி தொகுதி பார்வையாளர் சண்முகநாதன், திருவள்ளூர் தொகுதி பார்வையாளர் மாஸ்டர் பெ.சேகர், மாநில தொண்டர் அணி பயிற்சியாளர் மாஸ்டர். இ.குருதாஸ், மாவட்ட கழக நிர்வாகிகள் டாக்டர்.வி.சி.ஆர்.குமரன், சி.ஜெயபாரதி, எம்,மிதுன் சக்கரவர்த்தி, பொதுக்குழு உறுப்பினர்கள் ப.சிட்டிபாபு, எஸ்.கே.ஆதாம், வி.கிஷோர், மு.சுப்பிரமணியம், பி.இராஜேஸ்வரி இரவீந்திரநாத், ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் எஸ்.மகாலிங்கம், கூளூர் எம்.ராஜேந்திரன், க.அரிகிருஷ்ணன், மோ.ரமேஷ், கிறிஸ்டி(எ)அன்பரசு, ஜி.ரவிந்திரா, பா.ஆர்த்தி ரவி, சி.என்.சண்முகம், பெ.பழனி, வி.வினோத்குமார், சி.ஜெ.சீனிவாசன், என்.கிருஷ்ணன், பி.டி.சந்திரன், கே.இராஜேந்திரன், மா.இரகு, ஏ.எல்.விஜயகுமார், பா.சம்பத், சி.ஜெ.செந்தில்குமார், டி.ஆர்.கே.பாபு மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள் ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் அணிகளின் நிர்வாகிகள் கிளைக் கழக செயலாளர்கள் வார்டு கழக செயலாளர்கள் கழக இந்நாள் முன்னால் நிர்வாகிகள் பாக முகவர்கள் BLA 2, BLC, BDAக்கள் கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சி.இ.மதிவாணன் தலைமை ! அ.ரேவதி எம்.சி. – அ.தவநேசன் முன்னிலையில்

125வது வட்டப் பிரதிநிதி வேளாங்கண்ணி இல்ல மணவிழா வரவேற்பு!

மயிலை த.வேலு – எஸ்.முரளி – நந்தனம் கி.மதி வாழ்த்து!

சென்னை ஜூலை 1-

சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை கிழக்கு பகுதி 125 வது வட்ட கழகப் பிரதிநிதி வேளாங்கண்ணி, சுகுணேஸ்வரி ஆகியோரின் மகன் வே.விஜயகுமாருக்கும், பி.வெங்கடேசன் திருமதி டி.கவிதா ஆகியோரின் மகள் தமிழ் ஈஸ்வரிக்கும் திருமண வரவேற்பு விழா இன்று (1.7.2025 செவ்வாய்க்கிழமை) மாலை 6:30 மணி அளவில் மயிலாப்பூர் காரணீஸ்வரர் பகோடா தெருவில் அமைந்துள்ள சமுதாய நலக் கூடத்தில் நடைபெறுகிறது.

இம்மண விழா வரவேற்பு நிகழ்ச்சிக்கு 125 வது வட்டக் கழக துணைச் செயலாளர் சி.இ.மதிவாணன் தலைமை வகிக்கிறார்.

மாமன்ற உறுப்பினர் அ.ரேவதி, வட்டக் கழக செயலாளர் அ.தவநேசன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ஜி.எம்.செல்வராஜ், தமிழ் கரிகாலன், க.மணிகண்டன், என்.நிர்மல்குமார் ஆகியோர் வரவேற்புரை யாற்றுகின்றனர்.

விழாவில் சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ, மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி, மயிலே மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி ஆகியோர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

மேலும் எஸ்.முனுசாமி, சீமென் கோ.சேகர், பி.எல்.தாஸ், எ.குமாரி, எல்.உதயகுமார், வட்டச் செயலாளர்கள்: ஏ.தாஸ், மா.பா.அன்பு, வி.வெற்றிவேல், கோ.கண்ணன், துரை பார்த்திபன், பா பொன்னுசாமி,

மு.தம்பிதுரை, புலியூர் டி.மோசஸ், ஆர்.ராமலிங்கம், த.விக்னேஸ்வரன், எம்டிசி.ராமலிங்கம், ஆர்.செந்தில், உ.துரைக்கண்ணு, கு.ரவிச்சந்திரன், கோவிஸ் ஆர்.ரவிச்சந்திரன், தெ.மோகனவேலன், கயல் சிவராமன், எஸ்.நாகேந்திரன், ஜி.செழியன், எம்.சதீஷ், எம்.ஜி.மூர்த்தி, செ.தீபன், கே.பாட்ஷா, ஆர்.ரஞ்சித் குமார், ஏ.ஆனந்த், மு.மணிமாறன், வே.மணிகண்டன், கோ.ஜனார்த்தனன், எஸ்.மணிகண்டன், அ.ஜின்னா, எம்.மூர்த்தி, ஆர்.கிருஷ்ணவேணி, கே.வச்சலா, அ.விமலா,

வட்ட கழக நிர்வாகிகள் ஆர்.அழகேந்திரன், பட்டு ப.பிரகாஷ், கே.கலையரசி, எம்.வாசுதேவன், கே.நித்யா, எம்.புகழேந்தி, ஆர்.விக்ரம், கே.விஜயகுமார் உள்ளிட்ட அனைத்து கழக நிர்வாகிகள் விழாவில் பங்கேற்கின்றனர்.

சி.டி.கே.செல்வம், வி.மோகன், எம்.செல்வம், ஜி.வேலு, எஸ்.புதியவன், ஜி.பாரத், எம்.ரீகன், எஸ்.தீபக், ஆர்.குஷால், எம்.மோகன், இ.பாபு, எம்.அம்பேத்குமார், ஆர்.தேவி, ஆர்.மாரியம்மாள் ஆகியோர் நன்றியுரை ஆற்றுகின்றனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

"அன்னம் தரும் அமுதகரம்" 131வது நாள்!

துறைமுகம் தொகுதியில் 55, 57'அ' வட்டங்களில் உணவு வழங்கப்பட்டது!

சென்னை, ஜூலை.1-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 131 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (30.6.2025)

துறைமுகம் தொகுதி: 1) துறைமுகம் கிழக்கு பகுதி: வட்டம் - 55, ஏழு கிணறு பூங்கா அருகில் ஏழுகிணறு தெரு. 2) துறைமுகம் மேற்கு பகுதி: 57 அ வட்டம், அண்ணா பிள்ளை தெரு, ஆச்சரப்பன் தெரு சந்திப்பு, சென்னை. ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு வழிகாட்டுதல்படி "தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மேயர் பிரியா ராஜன், எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர், இசட்.ஆசாத், பி.ஸ்ரீராமுலு, ஜி.எம்.தேவன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, இப்ராஹிம் கனி, ஆர்.கலைச்செல்வி, பி.விஜயகுமார், எல்.சம்பத்குமார், பா.பிரதாப்குமார், எம்.விநாயகம், ப.ஜெகதீஷ் துறைமுகம் கிழக்கு / மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா, எம்.பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா.பார்த்திபன், எம்.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.இரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, டி.சதிஷ்குமார், வே.பா.பிரபாகரன், லண்டன் க. முருகன். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி தொகுதி பூனிமாங்காடு ஊராட்சியில் 15வது நிதிக்குழு மானியம் இருந்து ரூபாய் 78. 20 லட்சம் மதிப்பீட்டில் மருத்துவமனையில் கூடுதல் கட்டிடம் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன், எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டி பணியை துவக்கி வைத்தார். உடன் ஒன்றிய கழகச் பொறுப்பாளர் ஏ.எல்.விஜயகுமார், நிர்வாகிகள் ஏழுமலை, கமலநாதன், அர்ஜுனன், யுகேந்திரன், வெங்கடேசன், பரசுராம், புருஷோத்தமன், கோவர்தனம், இந்திரசேனா, போலாசி, எஸ்.ரவி, நரேஷ், சுதா, ரவி, ரமேஷ், குமாரசாமி, வினோத், விஜி,இ.காமராஜ்,எல்.சேட்டு, தங்கராஜ், சத்யா, உள்பட மருத்துவர்கள் செவிலியர்கள் அரசு அதிகாரிகள் கழக நிர்வாகிகள் பொதுமக்கள்கள் பலர் உள்ளனர்.

'ஓரணியில் தமிழ்நாடு' கழகத் தலைவரின் முன்னெடுப்பு!

தி.மு.க. இயக்கம் இன்றும் தன்னுடைய வீரியம் குறையாமல் பீடு நடை போடுகிறது என்றால்!அதற்கு காரணம் கொள்கை கோட்பாடுகளை குண்டு மணி அளவுக் கூட குறையாமல் பார்த்துக் கொண்டது தான்.சாமானிய வெகுஜன மக்களின் சராசரி கல்வியறிவு வாழ்க்கை தரத்தை மேம்படுத்தி இவர்களுக்கு தேவையான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை தமிழ் நாட்டில் உருவாக்கித் தந்து விட்டு இந்திய அரசியலில் தலைசிறந்த ஜனநாயகத் தூணாக விளங்குகிறது நம்முடைய மாபெரும் மகத்தான திமுக இயக்கம் என்பதில் நாம் பெருமிதம் கொள்வோம்.!இன்றையச் சூழலில் ஜனநாயக மாண்புகளை சீர் குலைத்து விட்டு ஒட்டுமொத்த நம் இந்திய தேசத்தின் இறையாண்மையை குழியில் புதைத்த படி அரசியலமைப்பு சட்டத்தையே நீர்த்துப் போகச் செய்யும் வேலையை மிக வும் கனகச்சிதமாக செய்கிறது பிஜேபி கட்சி என்றால் அது மிகையாகாது இந்த கட்சி தான் அதிமுக கட்சியுடன் கூட்டணியை அவசர அவசரமாக ஏற்படுத்திக் கொண்டு சமீப காலமாக அமைதிப் பூங்காவாக விளங்கும் தமிழ் நாட்டில் மதத்தின் பெயரால் ஜாதியின் பெயரால் கலவரங்களை தூண்டுகிற விதமாகப் செயல் படும் இந்த கீழ்த்தரமான பிஜேபி கட்சியின் போக்கை ஆரம்பத்திலேயே தடுத்து நிறுத்த வேண்டும் என்பதற்காக இந்திய தேசத்தின் நலனில் அக்கறை கொண்ட இயக்கம் நம்முடைய திமுக இயக்கம் என்பதையும் ஓட்டுமொத்த இந்திய தேசத்தின் மக்கள் யாவரும் அறியும் படி நம்முடைய தலைசிறந்த திராவிட மாடல் நாயகன் தமிழக முதல்வர் தலைவர் தளபதி..அவர்கள்"

"ஓரணியில் தமிழ் நாடு "எனும் முன்னெடுப்பு முதன் முதலில் தொடங்கி இருக்கிறார்கள் நம்முடைய தமிழ் நாட்டில்

1965 ஆம் ஆண்டு ஒன்றிய அரசு மற்றும் மாநில காங்கிரஸ் அரசின் இந்தி மொழி திணிப்பு உச்சம் தொட்டப் போது அதை எதிர்த்து தமிழ் நாடெங்கும் கிளர்ச்சிகள் எழுந்தது திமு கழகம் மூர்க்கத்தனமாக போராட்டக் களத்தில் இறங்கிய போது தான் மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் உணர்ச்சி வசப்பட்டு தமிழ் மொழியை காப்பதற்கு தீக் குளித்து நஞ்சு உண்டு துப்பாக்கி ரவைக்கு பலியாகி இறந்து போனார்கள் அன்றைய பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்கள் இப்படியாக நாடாளுமன்றத்தில் உறுதி அளித்தார் பொது மொழியான ஆங்கில மொழியும் அந்தந்த மாநில தாய் மொழி மட்டும் தான் இருக்கும் என்றும் இந்தியாவில் உள்ளடங்கிய மாநில மக்கள் விரும்பும் வரை இது தொடரும் என்று கூறினார் அப்போது நாடாளுமன்ற மாநிலங்கள் அவையில் அண்ணா அவர்கள் இந்திப் பாடம் இனி இல்லை என்ற தீர்மானத்தை படித்த போது அதிலே எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியை சொன்னால் தான் உணர்ந்து கொள்ள முடியுமே தவிர அதற்காக கஷ்டப்பட வர்கள் உணர்ந்து கொள்ள முடியாது தமிழகத்தில் தமிழ் பயிற்று மொழியாகவும் பாட மொழியாக எல்லா கல்லூரிகளிலும் நிர்வாக மொழியாகவும் பல்வேறு துறைகளில் 5 ஆண்டுக் காலத்திற்குள் நடைமுறைக்கு வருவதற்கான நடவடிக்கை அனைத்தும் மேற்கொள்வதாக என்று இம் மன்றம் தீர்மானிக்கிறது என்று பேசினார்கள் இன்றளவும் தமிழ் நாடு இரு மொழிக் கொள்கையில் பயணிக்க அண்ணா அவர்கள் போட்ட விதை தான் காரணம்

இந்திய மாநிலங்களில் பாதி அளவிற்கு இன்று தன்னுடைய தாய் மொழியை தொலைத்து விட்டு இந்தி மொழியை தூக்கி பிடிக்கும் வேலையில் தமிழ் நாடு கேரளா கர்நாடகா ஆந்திரா போன்ற மாநிலங்களில் தங்களது தாய் மொழி அழிந்து விடாமல் காத்து வருகிறது என்றால் அதற்கு காரணம் திமு கழகம் இந்தி திணிப்புக்கு எதிராக போர் பரணி பாடிய இயக்கம் என்பதும் இரு மொழி கொள்கையைப் பண்டிதர் ஜவஹர்லால் நேரு அவர்களால் ஏற்கும் படி செய்த இயக்கம் தான் திமு கழகம் என்பதையும் இங்கே குறிப்பிட்டுச் சொல்வதில் நாம் பெருமிதம் கொள்கிறோம்.! கலைஞர் காலத்திலும் சரி இன்றைய திமுகவின் தலைவர் தளபதி காலத்திலும் சரி நாம் இரு மொழிக் கொள்கையை தவறாமல் கடைப்பிடித்து வருகிறோம் என்பது தான் நிசர்தனமான உண்மை ஆகும் ஒன்றிய பிஜேபி மோடி அரசின் தவறான கொள்கை முடிவுகளை ஆண்மை திறன் கொண்டு தான் எதிர்த்து அரசியல் செய்கிறோம் என்பதில் எந்தவிதமான சந்தேகமுமில்லை..

தேசிய இயக்கம் காங்கிரஸ் ஆகட்டும் அல்லது பிஜேபி கட்சி ஆகட்டும் ஒன்றிய அரசாக பதவிக்கு வருகின்ற போது தன்னுடைய எல்லையை மீறி வரலாற்று நிகழ்வுகளை மறைக்கும் பொருட்டும் இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் எப்படியாவது அதிகார வர்க்கத்திற்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுப்பதற்கு அவ்வப்போது புதிய வடிவில் சட்ட முன் வடிவத்தை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்வது வழக்கமாக இருந்து வருகிறது என்பதும் இவர்களது மூர்க்கத்தனமான நிலைப்பாட்டை இந்திய மாநிலங்களில் எதையும் கவலை கொள்ளாமல் எதிர்ப்பு காட்டுவதில் திமுக இயக்கம் தான் முன் மாதிரியாக செயல்படுகிறது என்பதை நாம் எப்போதும் அறிந்த ஒன்று தான்

1983 ஆம் ஆண்டு சர்க்காரியா ஆணைக் குழு இந்திய நடுவண் அரசால் அன்று உருவாக்கப்பட்டது இந்தக் குழுவின் நோக்கம் மாநிலங்களுக்கும் நடுவண் அரசுக்கும் இடையே உள்ள அதிகாரப் பகிர்வுகளை ஆய்வு செய்து இந்திய அரசியல் அமைப்புக்கு உட்பட்ட ஒரு சில மாற்றங்களை பரிந்துரை செய்வதாகும் இது ஓய்வு பெற்ற நீதிபதி ரஞ்சித் சிங் தலைமையில் தான் இக் குழுவானது அமைக்கப்பட்டது.. இதன் பிறகு தான் வெங்கட செல்லையா குழு அல்லது தேசிய அரசியலமைப்புச் சட்டத்தை மறு ஆய்வு செய்வதற்கான ஆணையம் (National commission to Review the working to the constitution NCRWC) 2000 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது இதனுடைய நோக்கம் இந்திய அரசியலமைப்பின் செயல் பாடுகளை மதிப்பாய்வு செய்து தேவையான மாற்றங்களை பரிந்துரை செய்வதாகும் நீதிபதி எம்.என்.வெங்கட சலையா தலையில் உருவாக்கப் பட்டது

இதன் பிறகு பூஞ்ச் குழு 2007ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது இதுவும் மத்திய

மற்றும் மாநில உறவுகளை ஆராய்ந்த பிறகு அறிக்கையை தாக்கல் செய்தது இந்த குழுவின் தலைவர் முன்னால் இந்தியாவின் தலைமை நீதிபதி மதன் மோகன் பூஞ்ச் ஆவார்கள் இந்த குழு மத்திய மாநில உறவுகள் ஆளுநர்கள் பங்கினை பற்றியும் அவசர நிலையின் அதிகாரங்கள் போன்ற பல விஷயங்கள் ஆராய்ந்து அரசுக்கு பரிந்துரைகளையும் வழங்கியது இதன் தொடர்ச்சியாக தான் இன்றைய திமுகவின் தலைவர் தமிழக முதல்வர் தளபதி அவர்கள் இந்திய மாநிலங்களுக்கு சுயாட்சியை வழங்கப் படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு இக்குழுவின் மூலம் பரிந்துரைகள் செய்வதற்கும் தான் உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி சூரியன் ஜோசப் தலைமையில் ஒரு குழுவை அமைத்தார்கள் என்பது நாம் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமாகும்..!!

இந்திய மாநிலங்களின் உரிமைகளை காக்கும் பெரும் பொறுப்பு இப்போது திமுகவின் தலையாய கடமை ஆகும் இப்படியான தொடர் நடவடிக்கையின் காரணமாக தான் ஓரளவுக்கு ஒன்றிய அரசின் தவறான நடவடிக்கைகளுக்கு திமுக எதிர் வினை ஆற்றி கொண்டு இருக்கிறது.மாநில உரிமைகளை இட ஒதுக்கீடுகள் கல்வி பொருளாதாரம் மற்றும் ஏனைய மாநில உரிமைகளை மீட்டெடுக்கும் முயற்சியில் இன்றைக்கும் திமுக இயக்கம் தான் முன் மாதிரியாக செயல்படுகிறது.

சமீபகாலமாகத் தமிழ்நாடு பண்பாடு. பொருளாதாரம். அரசியல் ரீதியாகப் பல அநீதிகளைச் சந்தித்து வருகிறது. கீழடி ஆய்வுக்கு அங்கீகாரம் அளிக்காதது. இந்தித் திணிப்பு. தேசிய கல்வி கொள்கை எனும் பெயரில் கல்வி நிதியை மறுப்பது. இந்திய கூட்டாட்சி முறையைச் சிதைப்பது. இந்திய மக்கள் தொகைக் கணக்கெடுப்பதைக் காலம் கடத்துவது. தொகுதி மறு வரையறை என்ற பெயரில் நம் உரிமைக் குரலை நசுக்கி பிரதிநிதித்துவத்தை குறைப்பது இப்படி பட்ட வஞ்சக சூழ்ச்சி செய்தபடி தான் பிஜேபி அரசு காலம் தள்ளுகிறது

பிஜேபி மோடி அரசானது தன்னுடைய இந்துத்துவா கருத்தியலை மீண்டும் எப்படியாவது நடைமுறை படுத்துவதற்கு தமிழ் நாட்டின் நிதியை GST வரியின் மூலம் சுரண்டுவது நிரந்தரமாக நிதியை நிறுத்தி விட்டு தற்காலிகமாக நிதிச் சுமையை தமிழ் நாட்டின் மீது திணிப்பது தேசிய பேரிடர் மேலாண்மை வாரியம் மூலம் தமிழ் நாட்டிற்கு தரவேண்டிய வெள்ள நிவாரணத் தொகை சுமார் 45 ஆயிரம் கோடி தர மறுப்பது ஒன்றிய அரசுத் துறை . வங்கி. ரயில்வே போன்ற பொதுத் துறைகளில் தமிழர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்காமல் புறக்கணித்து விட்டு திட்டமிட்டு வட இந்தியர்களை நியமனம் செய்வது போட்டித் தேர்வுகளைக் கூட தமிழக இளைஞர்களை நிம்மதியாக எழுத விட மாட்டோம்... எனும் சபதம் எடுத்துக் கொண்டு செயல்படுவது இது தான் இன்றைய மோடி அரசின் லட்சியம் ஆகவே..இருக்கிறது..!

பஞ்சமர் சூத்திரர்கள் எது பெற்றாலும் பெறலாம் ஆனால் கல்வி மட்டும் கற்றுக் கொள்ள கூடாது என்பதன் காரணமாக பிராமணர்கள் ஆதிகாலத்தில் செய்த சூழ்ச்சி வேதகால பள்ளி ஆகும் முதன் முதலில் காடுகளில் தான் உருவானது இதன் கல்வி முறை என்பது குருகுல கல்வி முறையாகும் இதில் மாணவர்கள் குருவுடன் வசித்து கல்வி பயின்றனர் குருகுல கல்வி என்பது பண்டைய இந்தியாவில் பின்பற்றப்பட்ட ஒரு கல்வி முறையாகும் தங்கள் குருவின் வீட்டில் அதாவது காட்டில் தங்கி அவருடன் சேர்ந்து உணவு உண்டு கல்வி கற்று விட்டு வேலைகளையும் செய்வது ஆகும் குருகுல கல்வி முறை வேதங்கள் தர்ம சாஸ்திரங்கள் இலக்கணம் மருத்துவம் போன்ற பல பாடங்களை உள்ளடக்கியது மேலும் தினனைப் பள்ளி என்பது கூட பண்டைய நாட்களில் தமிழ் நாட்டில் ஆசிரியர் வீட்டு திண்ணையில் நடத்தப் பட்ட ஒரு வகை பள்ளி ஆகும் இது ஆங்கிலேயர் கல்வி முறை வருவதற்கு முன் தமிழகத்தில் நிலவிய ஒரு கல்வி முறையாகும் இப்படி பட்ட கல்வி முறை தான் இன்றைக்கு திராவிட திருநாட்டில் வளர்ந்து சாமானிய வெகுஜன மக்கள் பஞ்சமர் சூத்திரர்கள் பயன் பெற்று உலகளவில் உயர்ந்து நிற்கிறார்கள் என்றால் அது நம்முடைய நீதிக்கட்சி மூதாதையர்கள் தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா தலைவர் கலைஞர் இப்போது தலைவர் தளபதி போன்றோர் கட்டிக் காத்து வரும் கொள்கை ஆகும் இதைத் தான் RSS யின் மறைமுக செயல் வடிவமாக திகழும் பிஜேபி மோடியின் அரசு மீண்டும் பாமரனுக்கு கல்வி கிடைக்க கூடாது என்பதில் தெள்ளத் தெளிவாக இருப்பதன் காரணமாக தான்

தேசிய கல்வி கொள்கை எனும் மந்திரச் சொல்லை பயன்படுத்தி தமிழ் நாட்டிற்கு தர வேண்டிய கல்வி நிதியை தர மறுத்து விட்டது என்பதை நினைக்கும் போது நமக்கு கோபம் கொப்பளித்து வருகிறது 5300 ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் முதல் முதலாக இரும்பை உருக்கும் தொழில்நுட்பத்தை அறிந்தாலும். அதை இம்மியளவும் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று அடம் பிடிப்பது.கீழடி தொல்லியல் அறிக்கையை எக்காரணம் கொண்டும் வெளியிடமாட்டோம்!என வஞ்சக சூழ்ச்சி செய்து நிறுத்தி வைப்பது.தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு முதலாவதாக வந்தாலும். புதிய ரயில்வே திட்டத்திற்கு எந்தவொரு நிதியையும் ஒதுக்கீடுகள் செய்யாதது சுங்கச் சாவடிகள் காலாவதி ஆனாலும் தொடர்ந்து வசூல் செய்து

வாகன உரிமையாளர்களை துன்பத்தில் தள்ளுவது மேலும் சுங்கக் கட்டணத்தை அதிகரித்துக் கொண்டே இருப்பது

மக்கள் தொகைப் பெருக்கத்தை கட்டுக்குள் வைத்திருந்த காரணத்தால்

எம்.பி. தொகுதிகளையும் குறைப்போம்.

என்று அகம்பாவம் திமிரில் பேசுவது

முருகன் பெயரைச் சொல்லி மதுரையில் மாநாடு நடத்தி நடைபெற இருக்கும் 2026 தமிழ் நாடு சட்டமன்றத் தேர்தலில் அரசியல் லாபம் தேடிக் கொள்வதற்கும்

ஜாதி மதப் பிரச்சனையை கிளப்பி விட்டு இதன் மூலம் மக்களிடம் பிரிவினையை உண்டாக்கி வெற்றி பெற நினைப்பது இது தான் இப்போதைய பிஜேபி குரங்கு புத்தி கொடிய மனிதர்களின் தந்திரம் ஆகும் இது போன்று வட மாநிலங்கள் முழுதும் பிஜேபி கட்சி மக்களை ஏமாற்றி

ஆட்சி அதிகாரத்தில் அமர்ந்தார்கள் என்பது வரலாற்று உண்மை ஆகும்..!

இதற்காகவே பல சாமியார் குழுக்களை உருவாக்கி. வதந்திகளை பரப்புவதற்கு என்றே வாட்ஸ் ஆப் குரூப் குழுக்களை உருவாக்கி மக்களை பிரித்து விட்டு இன்றைக்கு வட இந்தியாவில் சிரித்து மகிழ்கிறார்கள் என்றால் இவர்களது கொடூரமான புத்தியை என்னவென்று சொல்வது பிஜேபி அரசை எதிர்த்து விமானங்கள் செய்பவர் மீது ED. IT. CBI ரெய்டு நடத்தி. காவல் நிலையம் மற்றும் நீதிமன்றத்திற்கு அலைய விடுவது மாநில கட்சிகள் இருக்கக் கூடாது எனும் சர்வாதிகாரத்தை கையில் எடுப்பது இது தான் பிஜேபி கட்சியின் அதிமுக்கிய வேலை ஆகிப் போனது தன்னுடைய தந்திர மூளையை பயன் படுத்தி சகல விதமான சதி வேலையை தமிழகத்தில் செய்ய துவங்கி விட்டார்கள் இவர்களது தில்லாலங்கடி வேலை செய்வதற்கு தமிழ்நாட்டில் தவளைப்பாடிகள் நாலு கோடி நாகேந்திரன் துணைபோவது நமக்கெல்லாம் மாபெரும் வெட்கக்கேடு

மேலும் இந்தியிசை பன்னீர் செல்வம் போன்ற எட்டப்ப கோமாளிகள் இங்கு இலகுவாக கிடைப்பதால் நம்முடைய தமிழ்நாட்டில் ஜாதி மதக் கலவரத்தை தூண்டுவது என்பது அமித்ஷா மோடி கும்பலுக்கு வேலை இலகுவாக முடிந்து விடுகிறது இப்படியாக தமிழ் நாட்டின் மீது வன்முறை தாக்குதலை பிஜேபி மோடி நடத்த தொடங்கி விட்டது என்று தான் கூறவேண்டும் நம் தமிழ்நாட்டின் பெருமைகளையும். மாண்புகளையும் சிதைக்க திட்டமிடும் அயோக்கியர்கள் ஒரேயொரு உண்மையை மறந்து விட்டார்கள் அவர்கள் மூடி மறைக்க நினைப்பது சாதாரண ஒளி அன்று. அது சூரியன்! எவர் தடுத்தாலும் சூரிய கதிர்வீச்சு ஒளிக் கதிர் ஊடுருவி சென்று பிரகாசிக்கும் சூரியனின் குணம் தான் தமிழ்நாட்டு மக்களின் குணம்.

சைதை சாதிக்
தலைமைக் கழகப் பேச்சாளர்

எவ்வளவு முறைமைகள் எதிரிகள் தமிழ் நாட்டில் நுழைய முயன்றாலும் ஒவ்வொரு முறையும் அவர்களை தடுத்து நிறுத்தி திணிக்கப்படும் அடக்கு முறைகளைத் தகர்த்து எழுச்சியுடனும் தமிழ்நாடு எழும்!நமது வானில் ஆபத்து மேகங்கள் சூழ்ந்த போதெல்லாம். இருளை அழித்து வெற்றி வெளிச்சத்தை பார்த்தவர்கள் தமிழ் நாட்டு மக்கள். ஏனெனில். தமிழர்களின் வெற்றிச் சூத்திரம் ஒன்றே ஒன்றுதான் தமிழருக்கு ஆபத்து வருகிற போதெல்லாம் உணர்வால் உள்ளதால் ஒன்று படுகிறார்கள் நமது எதி